பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

02 10 2024 **WEDNESDAY** 6 30 **PM**

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பழங்குடியினரின் மேம்பாட்டிற்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தேசப்பிதா மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில் பிரதமர் செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. சர்வதேச தரத்திற்கு இணையாக கல்வித்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. சொத்து வரி உயர்வை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும் என்று அஇஅதிமுக மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

5. உலக ஜூனியர் கலப்புக் குழு சாம்பியன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

பழங்குடியினரின் மேம்பாட்டிற்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம், **Hazaribagh-**ல் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்குவதில் பழங்குடியினரின் முன்னேற்றம் இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

பழங்குடியினரின் முன்னேற்றம் இன்றி இதனை எட்ட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பழங்குடியினரின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளதாவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

**>>>>><<<<<**

தேசப்பிதா மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னை, பரங்கிமலையில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானத்தை இன்று திறந்து வைத்த பின்னர் பல்லாவரத்தில் நடைபெற்ற தூய்மை இந்தியா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (1) 39 செகண்ட்ஸ்)

தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் 100 சதவீதம் வீடுகளுக்கு கழிவறை வசதி வழங்கப்பட்டுள்ளதாக திரு. எல். முருகன் கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) 47 செகண்ட்ஸ்)

அன்னையின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் திரு. எல். முருகன் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) 27 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னிலையில் திகழ வேண்டும் என்ற நோக்கில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச தரத்திற்கு இணையாக கல்வித்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் திமுக அரசு மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் மின்கட்டணம் 3 முறை உயர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பத்திரப்பதிவு கட்டணமும், பால் விலையும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சொத்துவரி உயர்வை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை (1) 50 செகண்ட்ஸ்)

அடுத்த இரண்டு தினங்களுக்கு கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை (2) 20 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருவள்ளூர் மாவட்டம், கோரமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாநில அமைச்சர் திரு. நாசர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார்.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டத்தில் குழந்தை திருமண முறை ஒழிப்பு குறித்த விளம்பர பதாகைகளை ஆட்சியர் திருமதி. சாருஸ்ரீ இன்று வெளியிட்டார்.

>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் ‘உரக்கச் சொல்’ என்ற கைபேசி செயலி மக்கள் பயன்பாட்டிற்காக இன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**>>>>><<<<<**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஸ்கேட்டிங் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**>>>>><<<<<**

தென்காசி மாவட்டம், பழைய குற்றால அருவியில் 24 மணிநேரமும் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கான முந்தைய நடைமுறை தொடர வேண்டும் என்று ஆயிரப்பேரி ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**>>>>><<<<<**

விளையாட்டுச் செய்திகள்

உலக ஜூனியர் கலப்புக் குழு சாம்பியன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் **Nanchang-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று துருக்கியை வென்றது.

காலிறுதிப் போட்டியில் இந்தியா - இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 25 மீட்டர் ஆடவர் பிரிவில் **Mukesh Nellavalli** யும், மகளிர் பிரிவில் **Divinshi** யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் மற்றும் மகளிர் 25 மீட்டர் குழுப் பிரிவுகளிலும் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

ஆடவர் 25 மீட்டர் பிரிவில் சுரஜ் சர்மா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 10 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

>>>>><<<<<

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சுப் பிரிவில் இந்தியாவின் பும்ரா முதலிடத்தை பிடித்தார்.

பேட்டிங் பிரிவில் ஜெய்ஸ்வால் மூன்றாவது இடத்திற்கும், விராட் கோலி ஆறாவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>><<<<<

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் இந்தியா 28 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்றது.

>>>>><<<<<

உலக கோப்பை கோகோ போட்டி, அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 24 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

>>>>><<<<<

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **Koneru Humpy** ஆறாவது இடத்தில் உள்ளார்.

**>>>>>END<<<<<**